வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. QP 1632

# ஈழநாடு
Eelanadu

விலை ரூ. 30/=

## சிறீதரன் எம். பி. இந்தியா பயணம்

கொழும்பு, நவ. 17
இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற குழு தலைவர் சி.சிறீதரன் எம்.பி. இந்தியாவுக்கு நேற்று ஞாயிற்றுக் கிழமை பயணமானார். இந்தியாவின் ஜார் கண்ட மாநிலத்தின் ராஞ் சியில் இன்று திங்கட் கிழமை நடைபெறவுள்ள எரிசக்தி மாற்ற தயார் நிலைக்குறியீடு நிகழ்வில் பங்கேற்பதற்காக அவர் இந்தியா பயணமானார் என்று அறிய வருகிறது.
இந்தப் பயணத்தில் இந்தியாவின் அரசியல், சமூக தலைவர்களை அவர் சந்தித்துக் கலந்துரையாடுவார் என்றும் தெரிய வருகிறது. (ஐ) 07

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 17.11.2025 திங்கட்கிழமை இதழ் : 321 பக்கங்கள் : 08

# திருக்கோணேஸ்வரம் அருகே மற்றொரு விகாரைக்கு அடிக்கல்

### அனுமதியின்றி இரவோடிரவாக அமைப்பு



திருகோணமலை, நவ. 17
ஈழத்தின் பஞ்ச ஈஸ்வரங் களில் ஒன்றும் பாடல் பெற்ற தலமுமான திருக்கோ ணேஸ்வரம் அருகே மற் றொரு விகாரைக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை அடிக் கல் நாட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே ஆலயத்தின் மிக அருகாக 4 விகாரைகள் அமைந்துள்ள நிலையில் இப்போது 5ஆவது விகாரைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 07

## பெருந்தோட்ட தொழிலாளர்கள் சவப்பெட்டி ஏந்தி போராட்டம்

- எதிர்க்கட்சியினரின் உருவபொம்மைகளும் எரிப்பு-



நுவரெலியா, நவ. 17
பெருந்தோட்டத் தொழிலாளருக்கான 200 ரூபாய் சம்பள உயர்வுக்கு மாறுபட்ட கருத்துகளை எதிர்க்கட்சி யினர் தெரிவிப்பதைக் கண்டித்து சவப்பெட்டியுடன் நுவரெலியா மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட் டனர்.
நுவரெலியாவின் பொகவந்தலாவை, 07

## வட்டியில்லாத கடன் பெற விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, நவ. 17
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சால் நடைமுறை ப்படுத்தப்படும் வட்டி இல்லாத மாணவர் கடன் திட்டத்தின் கீழ் பட்டப் படிப்பு களை கற்க 07

## சகல அரச, கல்வி நிறுவனங்களிலும் போதைப்பொருள் தடுப்பு குழுக்கள்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 17
போதைப்பொருளை ஒழிக்கும் நோக்கில் அரச நிறுவனங்கள், பாடசா லைகள், ஏனைய கல்வி நிறுவனங்களில் போதை ப்பொருள் தடுப்பு குழுக் களை அமைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரி வித்துள்ளார்.
போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத் தவும் பாவனைக்கான தேவையை முற்றாக நீக் கவும் இந்தக் குழுக்கள் செயல்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.
மேலும், இது தொடர்பான சுற்றறிக்கை பொது நிர்வாக 07

## அரச மருத்துவர்கள் இன்று தொழிற்சங்க போராட்டம்

கொழும்பு, நவ. 17
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இன்று திங்கட் கிழமை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இன்று காலை 8 மணி முதல் நாடு முழுவதுமுள்ள மருத்துவமனைகளிலும் தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் பிரபாத் சுகததாச தெரிவித்தார்.
அத்துடன், இன்றைய தினம் வெளிப்புற 07

## ஐ. எம். எவ்.ஐ திருப்திப்படுத்த அரசாங்கம் செயல்படுகின்றது

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்


கொழும்பு, நவ. 17
அரசாங்கம் தற்சமயம், ஐ. எம். எவ்.ஐ திருப்திப்படுத் தும் விதமாக செயல்பட்டு வருகிறது - என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
அத்துடன், தற்போதைய அரசாங்கத்தின் கிளீன் சிறி லங்கா வேலைத்திட்டம் என்பது தமது நண்பர்களுக்கு திறைசேரியை காலி செய்ய வழங்கப்பட்ட சந்தர்ப்ப மாகும். தற்போது, நாட்டில் ஊட்டச்சத்து குறை பாடு அதிகரித்து, மக்கள் மத்தியில் இரத்தச் 07

## ஜே. வி. பி. பொதுச்செயலாளர் டிசெம்பரில் இந்தியா பயணம்



கொழும்பு, நவ. 17
ஆளும் தேசிய மக்கள் சக்தியின் தாய்க் கட்சியான ஜே. வி. பி.இன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா எதிர்வரும் டிசெம்பர் முதல் வாரத்தில் இந்தியா செல்கிறார்.
இந்திய அரசாங்கத்தின் அழைப் பின்பேரில் 3 நாள் உத்தியோகபூர்வ பயணமாக செல்லும் அவர் புதுடில்லியில் உயர்மட்ட 07

## சீரற்ற வானிலையால் யாழில் 10 பேர் பாதிப்பு



- த.பிரதீபன்
யாழ்ப்பாணம், நவ. 17
சீரற்ற வானி லையால் யாழ்ப் பாணத்தில் 10 பேர் பாதிக்கப்ப ட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட 07

## இலங்கை - இந்தியா இடையே தரைவழி பாதை தேவையில்லை

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 17
இராமேஸ்வரம் - தலைமன் னார் இடையே தரைவழி பாதை (பாலம்) என்ற எண்ணக்கரு தற் போதை க்கு தேவையில்லை என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள் ளார். அத்துடன், இலங்கை 07

## வெளிநாட்டு பெண்ணுக்கு தொந்தரவு அளித்தவர் கைது

மட்டக்களப்பு, நவ. 17
வெளிநாட்டு யுவதி க்கு பாலியல் தொந்தரவு அளித்தார் என்ற குற்றச் சாட்டில் தேடப்பட்டு வந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
திருக்கோவிலை சேர்ந்த 24 வயதான ஒரு குழந்தையின் தந்தையே இவ்வாறு கைது செய்யப் பட்டார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.
குறித்த நபர் அம் பாறை - திருக்கோவி லுக்கு வந்த வெளிநாட்டு யுவதிக்கு பாலியல் தொந் தரவு அளித்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் 07

## வடக்கு, கிழக்கில் கனமழை இன்னும் இரு நாட்கள் நீடிக்கும்

### பேராசிரியர் பிரதீபராஜா

யாழ்ப்பாணம், நவ. 17
வடக்கு, கிழக்கில் பல பகுதிகளுக்கும் கிடைத்து வரும் கனமழை மேலும் இரு நாட்களுக்கு நீடிக்க வாய்ப்புள்ளது என்று யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை தலைவரும் காலநிலை அவதானிப்பாளருமான பேராசிரியர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அவதானிப்புக் குறிப்பில்,
நேற்று மதியம் ஒரு மணி வரையான 48 மணி 07



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராக புத்திக நியமனம்!

கொழும்பு, நவ. 17

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக ஜி. எம். எச். புத்திக சிறிவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் தீர்மானத்துக்கு அமைய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றங்கள், நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் குறித்த நியமனம் வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக இருந்த திலக் தனபால வட மத்திய மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வட மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஜி. எம். எச். புத்திக சிறிவர்த்தன வடக்கு மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ஐ-05)

# கிளிநொச்சி சாரணர் சங்கத்தின் சாதனையாளர்கள் கௌரவிப்பு



கிளிநொச்சி, நவ. 17

சாரணர் சங்கத்தின் 2025ஆம் ஆண்டுக்கான கிளிநொச்சி மாவட்ட சேவை மற்றும் உறவு மாத சாதனையாளர் களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் மாவட்ட ஆணையாளர் சி.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன் முதன்மை அதிதியாக கலந்து கொண்டு சாதனையாளர்களை மதிப்பளித்தார். இந்த நிகழ்வில் மதத் தலைவர்கள், பொதுமக்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# மரண அறிவித்தல்



## சுந்தரலிங்கம் மனோரஞ்சிதம்

கணேஸ்வரம், அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் மனோரஞ்சிதம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (16.11.2025) அன்று காலம் சென்றுவிட்டார்.

அன்னார் சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லர் - இராசம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற வன்னியன் - இலக்சுமி ஆகியோரின் அன்பு மருமகளும் லக்சன், சுபஸ்திகா, துவாரகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஞானசேகரன் (லண்டன்), சந்திரசேகரன், குணசேகரன், உதயகலா (சுவிஸ்), உதயதர்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் வேலாயுதம், தவமணி, செல்வமணி, லோகமணி, யாழினி, வனிதா, தங்கராணி, விக்னேஸ்வரன் (சுவிஸ்), குமுதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று திங்கட்கிழமை (17.11.2025) பிற்பகல் 2.00 மணியளவில் அவரது தாயாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் குடும்பத்தினர்.

# நாயை கொண்டு செல்லவும் மகிந்த ஹெலியை பாவித்தார்

## ஜெகதீஸ்வரன் எம். பி. தெரிவிப்பு

வவுனியா, நவ. 17

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ நாயைக் கொண்டு செல்லவும் உலங்கு வானூர்தியை பயன்படுத்தினார். தற்போது ஜனாதிபதி நிதியத்தின் நிதியை பெறும் வகையில் சேவைகள் பிரதேச செயலக மட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், எதிர்கட்சியினர் காலத்துக்குக் காலம் ஒவ்வொரு விடயங்களை கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். தற்போது மக்கள் விடுதலை முன்னணியின் பெலவத்தை பணிமனை தொடர்பில் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

எங்களுடைய அந்த பணிமனை நல்ல பண்பை கற்றுத் தருகிறார்கள். ஒழுக்கமுள்ள அரசியலை கற்றுத் தருகிறார்கள். ஒற்றுமையை எவ்வாறு மக்களிடத்தில் வளர்த்து எடுப்பது என கற்றுத் தருகின்றார்கள். கண்ணியமாக எமது மக்களோடு எவ்வாறு அரசியல் செய்வது என்பதை கற்றுத் தருகிறார்கள். இதை நான் உணர்ந்திருக்கிறேன்.

நாட்டை இன, மத, ஒற்றுமையுடன் கட்டி எழுப்புவது எவ்வாறு? பொருளாதார பின்னடைவில் இருந்து நாட்டை கட்டியெழுப்பி அபிவிருத்தி செய்வது எவ்வாறு என்று கலந்துரையாடுகின்றோம்.

உங்கள் கட்சி பணிமனைகளில் கடந்த காலத்தில் என்ன நடந்தது என சிந்தித்து பாருங்கள். குண்டர்களை எவ்வாறு தயார்படுத்துவது. அந்த குண்டர்களை எவ்வாறு வன்செயல்களில் ஈடுபட வைப்பது, மத்திய வங்கியில் கொள்ளையடித்த பணத்தை எவ்வாறு பங்கு போட்டு பிரித்துக் கொள்வது, இனவாதமான அரசியலை எவ்வாறு மேற்கொள்வது இவ்வாறான செயல்பாடுகளுக்கே பயன்படுத்தியுள்ளீர்கள். இதன்மூலம் கட்சி பணிமனைகள் ஊடாக இந்த நாட்டை சுரண்டி மக்களை குட்டிச்சுவராக்கினீர்கள் என்பதை மக்கள் அறிவார்கள் - என்றார். (ஐ-10)

# ஹாட்லியின் மைந்தர்களின் 26ஆவது நினைவேந்தல் இன்று

வடமராட்சி, நவ. 17

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மைந்தர்களின் நினைவேந்தல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை இன்பர்சிட்டி கடற்கரையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் 2000ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் நால்வர் கல்வி செயல்பாட்டுக்காக 1999 நவம்பர் 17ஆம் திகதி இன்பர்சிட்டி கடல்பகுதியில் கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது கடல் அலையில் சிக்கி உயிரிழந்தனர்.

பூரணமூர்த்தி கந்தர்வன், சிவநாதன் இரவிசங்கர், சுந்தரலிங்கம் சிவோத்தமன், பாலகிருஷ்ணன் பிரதீபன் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தனர். இவர்களுடன், பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக கல்வி கற்றுவந்த வேளை ரயில் விபத்தில் சிக்கி உயிரிழந்த மரியரட்ணம் குணரட்ணம் என்பவரின் 21ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் இன்பர்சிட்டி கடற்கரையில் நினைவேந்தப்படவுள்ளது. (ஐ-02)

# வல்வெட்டித்துறையில் 90 பேர் இரத்த தானம்!



வடமராட்சி, நவ. 17

வல்வெட்டித்துறை இரத்ததான சங்கம் நேற்றைய தினம் நடத்திய குருதிக்கொடை முகாமில் 90 பேர் குருதிக் கொடை வழங்கினர்.

வல்வெட்டித்துறை நெடியாகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை இந்த இரத்ததான முகாம் நடைபெற்றது.

கொட்டும் மழையின் மத்தியிலும் 71 ஆண்களும் 19 பெண்களுமாக 90 பேர் இரத்த தானம் செய்தனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கி பிரிவினர் குருதியை பெற்றுக் கொண்டனர். (ஐ-08)

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா வடக்கு நிர்வாக தெரிவு




வவுனியா, நவ. 17

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா வடக்கான நிர்வாக தெரிவு புதுக்குளம் பொதுநோக்கு மண்ட பத்தில் நடைபெற்றது.

இதன் போது ஆசிரியர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்னைகள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டிருந்தது. வவுனியா மாவட்ட இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் பா.நேசராசா தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் சங்க முக்கியஸ்தர்கள் ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# சுகாதார சீர்கேட்டுடன் உணவு; இருவருக்கு ரூ. 50 ஆயிரம் தண்டம்

வடமராட்சி, நவ. 17

செல்லவச்சந்நிதி ஆலய சூழலில் சுகாதார சீர்கேட்டுடன் பானிப்பூரி விற்பனை செய்தவர், உணவக உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப் பட்டுள்ளது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் கடந்த வாரம் வல்வெட்டித்துறை பொது சுகாதார பரிசோதகர் பிரிவு பரிசோதனைகளில் ஈடுபட்டனர். இதன்போதே, சுகாதாரமற்ற முறையில் பானிப்பூரி விற்றவர் மற்றும் உணவகம் ஒன்றை நடத்தியவர் அடையாளம் காணப்பட்டனர்.

அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. குற்றங்களை ஏற்ற இருவருக்கும் பருத்தித்துறை நீதி மன்றம் 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது. (ஐ)

# இலுப்பைக்கடவை கடலில் கூட்டமாக வந்த டொல்பின்

மன்னார், நவ. 17

மன்னார் கடற்பரப்பில் நேற்று மதியம் டொல்பின்கள் கூட்டமாகக் காணப்பட்டன.

மன்னார் - மாந்தை - இலுப் பைக்கடவை கடற்கரையிலேயே இந்த டொல்பின்கள் கூட்டம் காணப்பட்டது.

இதுபற்றி அறிந்த அந்தப் பகுதியினர் கூட்டமாக சென்று பார்வையிட்டனர்.

மன்னார் மாவட்டத்தில் கரையோரப் பகுதிக்கு இந்த டொல்பின் மீன்கள் கூட்டம் வருகை தந்திருப்பது அண்மைக் காலத்தில் இதுவே முதல் தடவையாகும். நீண்டநேரம் இந் தப் பகுதியில் சுற்றித்திரிந்த டொல் பின்கள் கூட்டம் பின்னர் அங்கிருந்து சென்றன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
17.11.2025 திங்கட்க்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இனப்பிரச்னை தொடர்பில் பேசுதல்

இனப்பிரச்னை தொடர்பில் ஜனாதிபதி அநுர குமாரவுடன் பேசவுள்ளதாக இலங்கை தமிழ் அரசு கட்சி தெரிவித்திருக்கிறது. தமிழ் அரசு கட்சி இவ்வாறு கூறுகின்றபோதிலும் இலங்கையில் இனப்பிரச்னை ஒன்று இருப்பதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உத்தியோகபூர்வமாக இதுவரையில் தெரிவித்ததில்லை. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பில் ஆம் என்றோ இல்லை என்றோ கூறாத ஓர் அணுகுமுறையையே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. இதனை ஓர் அரசியல் தந்திரோபாயமாகவே முன்னெடுத்து வருகிறது. கோட்டாபய ராஜபக்ஷவின் அணுகுமுறையும் இவ்வாறானதாகவே இருந்தது. ஆனால், கோட்டாபய வெளிப்படையாக அரசியல் தீர்வை எதிர்த்தது போன்ற அணுகுமுறையை தேசிய மக்கள் சக்தி கடைப்பிடிக்கவில்லை. அது ஒன்றுதான் வித்தியாசமானது.

எனினும், ஜனாபதியுடன் தமிழ் அரசு கட்சி பிரத்தியேமாக பேசுவது முக்கியமானதுதான். பேசுவதைத் தவிர தற்போதைய சூழலில் எதனை யும் முன்னெடுக்கக்கூடிய நிலையில் தமிழர் தரப்பு இல்லை. ஆனால், எதனை அடிப்படையாகக் கொண்டு பேசுவது என்பதிலும் தமிழ் அரசு கட்சி கவனம் செலுத்த வேண்டும். தேசிய இனப்பிரச்னை தொடர்பில் ஆட்சியில் உள்ளவர்களுடன் பேசுவது புதிய விடயமல்ல. தமிழ் அரசு கட்சியின் ஸ்தாபகர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் காலத்திலிருந்து மாறி மாறி ஆட்சி அமைக்கும் தென்னிலங்கை ஆட்சியாளர்களோடு பேசப்பட்டிருக்கிறது.

ஆனால், நடந்தது எதுவுமில்லை - காரணம் என்ன? தென்னிலங்கை ஆட்சியாளர்கள் ஒன்றில் உறுதியாக இருக்கின்றனர். அதாவது, சமஷ்டி அடிப்படையில் எந்தவோர் அரசியல் தீர்வையும் ஏற்றுக்கொள்வதில்லை. அதாவது, பெரும்பான்மையினருக்கு சமாந்தரமான எந்தவோர் அரசியல் ஏற்பாடுகளையும் தமிழர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாது. பண்டா - செல்வா உடன்பாடு என்பது அவ்வாறான பின்புலத்தில் நிகழ்ந்த ஒன்றுதான்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்பின் காரணமாக ஆகக்குறைந்த விடயங்களும் அரசியல் யாப்பில் உள்வாங்கப்படவில்லை. உள்வாங்க முடியாத அரசியல் சூழல் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. அதாவது, ஒரு கட்சி ஆதரிப்பதை இன்னொரு பிரதான கட்சி எதிர்ப்பதன் ஊடாக இறுதியில் எதனையும் செய்ய முடியாத நிலைமை தோற்றுவிக்கப்படும். இந்த விடயம் தென்னிலங்கை அரசியலின் ஓர் அங்கமாகவே மாறிவிட்டது. இவ்வாறான தொரு பின்புலத்தில் தென்னிலங்கையின் அரசியல் நிலைமைக்கு மாறாக அதிசயங்களை நிகழ்த்த அநுர குமாரவால் முடியுமா?

நிச்சயமாக முடியாது என்பது இலங்கை தமிழ் அரசு கட்சிக்கும் தெரியாத ஒன்றல்ல. எனினும், ஒரு பிரதான கட்சியென்னும் வகையில் தாங்கள் பேசுகிறோம் என்பதை வாக்களித்த மக்களுக்கு காண்பிக்க வேண்டிய நிலைமை உண்டு. தேர்தல் அரசியல் கண்ணோட்டத்தில் இதனைப் புரிந்துகொள்ள முடிந்தாலும்கூட, ஒரு பொறுப்பு வாய்ந்த மக்கள் தலைமையின் அணுகுமுறை உண்மையை எடுத்துரைப்பதாக இருக்க வேண்டும். அதாவது, இன்றைய நிலையில் எதனை வலியுறுத்த வேண்டுமோ அதனையே அரசாங்கத்திடம் சுட்டிக்காட்ட வேண்டும். உச்சபட்சமான ஓர் அரசியல் இலக்கைக் கைக்கொண்டாலும்கூட, அடிப்படையில் அரசியல் என்பது நடைமுறைக்கு சாத்தியமான விடயங் களைக் கையாள்வதுதான். இந்த அடிப்படையில் நோக்கினால் மாகாண சபைகள் தேர்தலை நடத்துமாறு கோருவதும் அதிலிருந்து படிப்படியாக வடக்கு - கிழக்கை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதும்தான் இன்றைய சூழலில் சாத்தியமான ஒன்று.

இனப்பிரச்னை தொடர்பில் பேசுதல் என்பது அடிப்படையில் நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களின் அடிப்படையில் முன்னோக்கிப் பயணிப்பதற்காக பேசுவதாகும். தமிழ் அரசு கட்சி இதனைப் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும். ஏனைய தரப்புகள் விமர்சிக்கும் என்பதற்காக நடைமுறைக்கு மாறாக பேசினால் மக்களுக்கு நேர்மையான ஒரு தலைமையாக இருக்க முடியாது. மக்களுக்கு உண்மையாக இருந்தால் மக்கள் குறித்த கட்சியுடன் நிற்பார்கள்.

## வட மாகாண மர நடுகை மாதம் கார்த்திகை - 2025



"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்."
-நி.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)

# ஊடகங்களுக்கு தகவலை மறைக்கும் தேவை அரசாங்கத்துக்கு கிடையாது

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால

கொழும்பு, நவ. 17

ஊடகங்களுக்கு தகவல் களை வழங்குவதை தடுக்க வேண்டிய தேவையோ அல் லது நோக்கமோ அரசாங்கத் துக்கு கிடையாது என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலு வல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அரச நிதியை மோசடி செய்து நாட்டை வங்குரோ த்து நிலைக்கு தள்ளியவர்கள் பெருந்தோட்ட மக்களுக்கு 200 ரூபாய் சம்பளம் வழங் குவதை எதிர்க்கிறார்கள். வழங்கிய வாக்குறுதிக்கு அமைய 200 ரூபாய் சம்ப ளத்தை வழங்குவோம் என்று பெருந்தோட்ட மக்களுக்கு உறுதியளிக்கிறோம் எனவும் அமைச்சர் கூறினார்.

பாராளுமன்றத்தில் வெள் ளிக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் உரையாற்று கையில் அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற் றியதாவது,

பொருளாதார பாதிப்பு க்கு மத்தியில் தான் அரசாங்க த்தை பொறுப் பேற்றோம். நாட்டின் நிதி நிலைமையை ஸ்திரப்படுத்திக் கொண்டு 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அரச சேவையை வினைத்திற னாக்குவதற்கு டிஜிற்றல் மயப்படுத்தலுக்காக பல மில்லியன் ரூபாய் ஒதுக்கப்ப ட்டுள்ளது. அதேபோல் சம்பள அதிகரிப்புக்கு 11 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக் கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மக்களுக் கான 200 ரூபாய் சம்பள அதிகரிப்பு பற்றி எதிர்க்கட்சி யினர் மாறுபட்ட கருத்தை குறிப்பிடுகிறார்கள். அரச நிதியை மோசடி செய்து நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்கள் தான் பெருந்தோட்ட மக்க ளுக்கான சம்பள அதிக ரிப்பை எதிர்க்கிறார்கள்.

குறிப்பிட்டதைப் போன்று பெருந்தோட்ட மக்களுக்கு 200 ரூபாய் சம்ப ளத்தை வழங்குவோம். பெருந்தோட்ட மக்கள் இந்த நாட்டின் பொருளாதாரத் தின் பிரதான பங்காளியாக உள்ளார்கள். அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்ப டுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

குற்றவாளிகள் கைது செய்யப்படும் போது அவர் களின் விவரங்களை ஊடகங் களுக்கு வெளியிடுவது குறித்து பொலிஸ்மா அதிபர் வெளியிட்ட சுற்றறிக்கை தொடர்பில் எதிர்க்கட்சி யினர் மாறுபட்ட கருத்தை வெளியிடுகிறார்கள். விசார ணைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களை ஊடகங்களுக்கு வழங்க வேண்டாம் என்றே பொலி ஸ்மா அதிபர் குறிப்பிட்டி ருந்தார்.

ஊடகங்களுக்கு தகவல் களை வழங்குவதை தடுக்க வேண்டிய தேவையோ அல் லது நோக்கமோ அரசாங்கத் துக்கு கிடையாது. எதிர் வரும் 21 ஆம் திகதி அரசாங் கத்தை வீழ்த்தும் போராட் டத்தில் ஈடுபடுவதாக குறிப் பிட்டவர்கள், தற்போது மக்களுக்கு வழங்கிய வாக்கு றுதிகளை நினைவுபடுத்தவே போராட்டத்தில் ஈடுபடுவ தாக குறிப்பிடுகிறார்கள். அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் எதிர்க்கட்சியி னருக்கே எதிரானதாக அமை யும்- என்றார்.(எ)


# காட்டு யானை தாக்கி தாய் பலி தந்தை காயம்

கொழும்பு, நவ. 17

மகளை பார்ப்பதற்கு சென்று கொண்டி ருந்த தந்தையையும் தாயையும் யானை தாக்கி யதில் தாய் உயிரிழந்தார். தந்தை படுகாயம டைந்தார். இந்தச் சம்பவம் பொலநறுவை , அரலகங் வில, சிலுமனிசேய பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

தமது மகளின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த தந்தையும் தாயுமே இவ்வாறு யானையால் தாக்கப்பட் டனர். உயிரிழந்தவர் வெலிகந்தையை சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயாவார். இதில், காய மடைந்த 60 வயதான தந்தை பொலநறுவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உயரதிகாரிகள் உங்களை கலந்தாலோசித்து முடிவுகள் எடுப்பார்கள்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரி உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். தைரியம் கூடும்.

**சிம்மம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். உறவினர்கள் உங்களை புரிந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். நிம்மதியான நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கொஞ்சம் பொறுமையை இழப்பீர்கள். சிலரின் நயவஞ்சக செயலை நினைத்து வருந்துவீர்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பது நல்லது. அலைச்சல் நாள்.

**துலாம்**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாக பேசி வசூலிக்கப் பாருங்கள். பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள். உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள். இனிமையான நாள்.

**தனுசு**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவுக் கிடைக்கும். மதிப்புக் கூடும்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். வாக்குறுதியை நிறைவேற்ற போராட வேண்டி வரும். ஈகோ அதிகரிக்கும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**மீனம்**
உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

# மன்னார் தாழ்வுபாடு கடலில் இரு படகுகள் மோதி விபத்து



மன்னார், நவ. 17

மன்னார் தாழ்வுபாடு மீன்பிடித் துறையிலிருந்து நேற்று முன்தினம் இரவு கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவரின் படகுடன், கடலில் மீன்பிடித்துவிட்டு கரை திரும்பிய மற்றுமொரு மீனவரின் படகு மோதியதில் இரண்டு படகுகளும் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்து தாழ்வுபாடு கடற்கரையில் இருந்து சுமார் 150 மீற்றர் தொலைவில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஒரு படகு கரை திரும்பிய நிலையில், மற்றைய படகு கடலில் மூழ்கியது. பின்னர் அந்தப் படகு மீட்கப்பட்டு கரைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும், கடலில் மூழ்கிய படகில் பயணித்த மீனவர் ஒருவர் நேற்றுக் காலை சிகிச்சைகளுக்காக மன்னார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான இரண்டு படகுகளின் உரிமையாளர்களும் குறித்த விபத்து குறித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மேலும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர் தொழிலுக்குச் சென்ற மீன்பிடிப் படகின் வெளி இணைப்பு இயந்திரம் அவர்களின் மீன் வாடியில் வைக்கப்பட்ட நிலையில், மற்றைய படகின் மீனவர்கள் தமது படகு சேதமானதை தெரிவித்து குறித்த வாடியின் கதவை உடைத்து அந்த வெளி இணைப்பு இயந்திரத்தை எடுத்துச் சென்றதாக தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் குறித்தும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)



## பனம் விதை நடுகையும் ஓடியற்கூழ் பகிர்வும்

வவுனியா, நவ. 17

பனம் விதை நடுகையும் ஒடியற்கூழ் பகிர்வும் வவுனியா கண்ணாடி கணேசபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவுனியா இளைஞர்கள் இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு உயிர்மை இயற்கை வழி பண்ணையில் நடைபெற்றது.

யானைகளை தடுப்பதற்கான இயற்கை வேலி அமைக்கும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதோடு இதற்காக பனம் விதைகள் நடப்பட்டன. தமிழர்களின் பாரம்பரிய உணவான ஒடியற்கூழ் பகிர்ந்து உண்ணும் நிகழ்வும் நடைபெற்றது.

இதில் வவுனியாவை சேர்ந்த பல இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டதோடு பல்வேறு இடங்களில் இருந்தும் வந்த இளைஞர்கள், முதியவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

## நெடுந்தீவில் துப்பாக்கி மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 17

நெடுந்தீவு பகுதியில் பாவனையற்ற காணியிலிருந்து துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு 9 ஆம் வட்டாரப் பகுதியில் உள்ள பாவனையற்ற காணியில் இருந்தே மேற்படி துப்பாக்கி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், குறித்த துப்பாக்கி ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் சான்றுப் பொருளாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-03)

## பருத்தித்துறையில் போதை ஒழிப்பு ஸ்ரிக்கர் ஒட்டும் செயல்திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போதை ஒழிப்பு ஸ்ரிக்கர் ஒட்டும் செயல்திட்டம் நேற்று முன்தினம் காலை முன்னெடுக்கப்பட்டது.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனைத்து ஓட்டோக்களுக்கும் போதை ஒழிப்பு ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டதுடன், விழிப்புணர்வும் வழங்கப்பட்டது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் போதை ஒழிப்பு "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயல்பாட்டுக்கு அமைவாக போதை ஒழிப்பு அடையாள ஸ்ரிக்கர் ஒட்டும் செயல்திட்டம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது.

பிராந்திய உப பொலிஸ் அத்தியட்சகர் திலக், பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தலைமையில் இந்த ஸ்ரிக்கர் ஒட்டும் செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நூற்றுக்கணக்கான ஓட்டோக்கள் பதிவு செய்யப்பட்டு ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டது.

## 20 போதை மாத்திரைகள், கஞ்சாவுடன் யாழ்ப்பாணத்தில் மூன்று பேர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் 25 கிராம் கேரளக் கஞ்சா மற்றும் 20 போதை மாத்திரைகள் என்பனவற்றுடன் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் வல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் போதைத்தடுப்பு பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொறியை திருடியவரால் விபத்துகள் ஒருவர் உயிரிழப்பு; நால்வர் படுகாயம்!

கொழும்பு, நவ. 17

**லொறியை திருடி அதனை செலுத்திச் சென்றவரால் ஏற்பட்ட இரு விபத்துகளில் ஒருவர் உயிரிழந்தார். நால்வர் படுகாயமடைந்தனர்.**

கம்பஹா - கந்தானை பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருபவவை வருமாறு,

கந்தானை - மரியா மாவத்தையில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் லொறி ஒன்று திருடப்பட்டது. இதையடுத்து லொறியின் உரிமையாளரும் ஊழியர்களும் சேர்ந்து வாகனத்தை பின்தொடர்ந்தனர். சந்தேக நபர் லொறியை நிறுத்தாமல் அதனை வேகமாக ஓட்டிச் சென்றுள்ளார்.

அப்போது, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை லொறி மோதியது. இதில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் காயமடைந்தனர். இதைனைத் தொடர்ந்து மற்றொரு மோட்டார் சைக்கிளையும் லொறி மோதியது. இதில் இருவர் படுகாயமடைந்தனர். இந்த விபத்தில் காயமடைந்த ஒருவர் ராகமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். உயிரிழந்தவர் 43 வயது நபராவார்.

இதன் பின்னர் சுவர் ஒன்றுடன் மோதி லொறி தடம்புரண்டது. இதன்போது, சந்தேகநபரை பொதுமக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கைதான சந்தேகநபர் ஜாஎலவை சேர்ந்த 46 வயது நபராவார். அவரும் இந்த விபத்தில் காயமடைந்தார். அவர் பொலிஸ் பாதுகாப்பில் ராகமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

கந்தானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நெகிழி பைகளுக்கு பதிலாக காகித பைகள் தயாரியுங்கள்

## சுற்றாடல் அமைச்சுக்கு ஆலோசனை



கொழும்பு, நவ. 17

நெகிழிக்கு பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த காகிதப் பைகளைத் தயாரிக்க சுற்றாடல் அமைச்சு தலைமைத்துவம் வகிக்க வேண்டும் என்று சுற்றாடல் கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வை குழு அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியது.

பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது நெகிழி பைகளுக்கு கட்டணம் அறவிடும் தீர்மானம் தொடர்பில் குழுவில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த முன்மொழிவு முன்வைக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின் மூலம் நெகிழி பயன்பாடு குறைக்கப்படுமா என்பதை பரிசீலிக்க வேண்டும் என்றும் குழுவின் தலைவர் அதிகாரிகளிடம் வலியுறுத்தினார்.

பொருட்களை கொள்வனவு செய்யும்போது இந்தப் பைகளுக்கு செலுத்த வேண்டிய தொகையை முடிவு செய்த அதிகாரிகள் யார் என்பதையும் குழுவின் தலைவர் வினவினார்.

நெகிழி பைகளுக்கு பணம் செலுத்த வேண்டும் என்று வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்படவில்லை என இதன்போது அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வை குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தலைமையில் நவம்பர் 10 மற்றும் 12 ஆகிய தினங்களில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து சிறீநேசன், ரொஷான் அக்மீமன, சதுரி கங்கானி, சுசந்த குமார நவரத்ன, கிட்ணன் செல்வராஜ், (சட்டத்தரணி) பாக்ய சிறீ ஹேரத், (சட்டத்தரணி) சித்ரால் பெர்னாந்து, ஜே.சி. அலவத்துவல, (சட்டத்தரணி) சுஜீவ சேனசிங்க மற்றும் உபுல் கித்சிறி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ஐ)

# பாடசாலை அருகே போதைப்பொருள் விற்றவர் கைது!

கொழும்பு, நவ. 17

பாடசாலைக்கு அருகில் போதை மாத்திரைகளை விற்பனை செய்த இளைஞன் ஒருவர் ஹொரணை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹொரணை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் ஹொரணை பிரதேசத்தில் வைத்து சந்தேக நபரான இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் ஹொரணை பிரதேசத்தில் வசிக்கும் 25 வயதுடைய இளைஞன் ஒருவர் ஆவார். அவரிடமிருந்து 220 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சந்தேகநபர்கள் மூவர் கைது!

கொழும்பு, நவ. 17

காலி - அம்பலாங்கொடை - மோதரை தேவாலய குழு தலைவர் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், சந்தேகநபர்களிடமிருந்து துப்பாக்கி ஒன்றும் 7 தோட்டாக்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அம்பலாங்கொடை நகராட்சி மன்றத்துக்கு சொந்தமான நூலகத்துக்கு முன்பாக கடந்த 4 ஆம் திகதி இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. (ஐ)

# குற்ற சந்தேகநபர்கள் 769 பேர் கைதாகினர்

கொழும்பு, நவ. 17

பொலிஸாரின் விசேட நடவடிக்கையில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 769 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய நேற்று முன்தினம் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, 31 ஆயிரத்து 873 பேர் பரிசோதிக்கப்பட்டனர். இதில், 29 பேர் நேரடி குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்று அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிடியாணை பிறப்பக்கப்பட்ட 322 பேரும் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 153 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 17 பேரும் கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 31 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4 ஆயிரத்து 528 பேருக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# 350 வகையான மருந்துகளின் விலைகள் குறைக்கப்பட்டன

கொழும்பு, நவ. 17

சுமார் 350 வகையான மருந்துகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்று தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்த மருந்துகளை அதிக விலைக்கு விற்பனை செய்யும் எந்தவொரு தனிநபர் அல்லது நிறுவனம் தொடர்பில் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் முறையிடுமாறு பொதுமக்கள் கோரப்பட்டுள்ளனர்.

இந்த வாரம் வெளியிடப்பட்ட குறித்த பட்டியலில் பொதுவான பெயர், மருந்தளவு வடிவம், வலிமை, உற்பத்தியின் பெயர், உற்பத்தியாளர், பிறந்த நாடு மற்றும் இலங்கை ரூபாயில் ஓர் அலகின் விலை உட்பட 350 உள்ளீடுகள் உள்ளன.

புதிய விலை நிர்ணயத்துக்கு ஏற்ப, 500 மில்லி கிராம் பரசிட்டமோல், அஸ்பிரின் உள்ளிட்ட மருந்துகளுக்கும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# துப்பாக்கி, தோட்டாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

கொழும்பு, நவ. 17

அனுமதிப்பத்திரம் இன்றி துப்பாக்கி, தோட்டாக்கள் வைத்திருந்த ஒருவரை சிலாபம் புலனாய்வு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று, தோட்டாக்கள் 3, சுங்க வரி செலுத்தாமல் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட 460 சிகரெட்கள், 202 லீற்றர் கோடா என்பவை கைப்பற்றப்பட்டன.

கைதானவர் 45 வயது நபர் என்றும் அவர் அம்பாறை - அக்கரைப்பற்று பகுதியை சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# போதைப்பொருட்களுடன் 1,115 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, நவ. 17

நாடு முழுவதும் போதைப் பொருளை தடுக்கும் "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் போதைப் பொருட்களுடன் தொடர்புடைய ஆயிரத்து 115 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, 531 கிராம் ஹெரோயின், 754 கிராம் ஐஸ், 8 கிலோ 953 கிராம் கஞ்சா, 82 ஆயிரத்து 605 கஞ்சா செடிகள், 6 கிராம் ஹஷீஷ் போதைப்பொருள், 249 போதை மாத்திரைகள் மற்றும் 4 கிலோ 121 கிராம் மாவா என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்களில் 63 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# சாரதி அனுமதி புத்திரங்கள் அச்சிடும் பணி மீள ஆரம்பம்

கொழும்பு, நவ. 17

வாகன சாரதி அனுமதி பத்திரங்களை அச்சிடும் பணி மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கு அட்டைகள் இல்லாததமையால் சாரதி அனுமதி பத்திரங்கள் வழங்குவது நிறுத்தப்பட்டது. அத்துடன், தற்காலிக சாரதி அனுமதி பத்திரம் வழங்கப்பட்டது.

இதன்படி, அச்சிடுவதற்கு கிடைக்கக்கூடிய சாரதி அனுமதி பத்திரங்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 50 ஆயிரத்தை நெருங்கியது. இந்த நிலையிலேயே சாரதி அனுமதி பத்திரங்களை அச்சிடும் பணி ஆரம்பமாகியுள்ளது. இந்தப் பணி 3 இடங்களில் மேற்கொள்ளப்படும் என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

வேரஹெரவில் உள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களம், அம்பாந்தோட்டை, அநுராதபுரத்தில் உள்ள மையங்களிலும் இந்த பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கமைய, நாளாந்தம் சுமார் 6 ஆயிரம் சாரதி அனுமதி பத்திரங்களை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாகவும் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இவற்றில், ஒரு நாள் சேவையின் கீழ் 1,500 சாரதி அனுமதி பத்திரங்களும் சாதாரண சேவையின் கீழ் 4500 சாரதி அனுமதி பத்திரங்களும் வழங்க எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, நிலுவையில் உள்ள சாரதி அனுமதி பத்திரங்களை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அச்சிட்டு விநியோகிக்க முடியும் என்றும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் ஊழல் மோசடி

கல்முனை, நவ. 17


கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் பெரும் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதுடன் முறையற்ற விதத்தில் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை வழங்குவதாக தென்கிழக்கு கரையோரப் பிரதேச தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் எம். எஸ். பைறூஸ் தெரிவித்தார்.

தென்கிழக்கு கரையோரப் பிரதேச தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டம், அட்டாளைச்சேனையில் நடைபெற்றது.

இதில் சங்கத்தின் தலைவர் உட்பட நிர்வாக சபை உறுப்பினர்களும் பங்கேற்றனர். இதன் போது, செயலாளர் பைறூஸ் மேலும் கூறுகையில்,

கடந்த பல வருடங்களாக கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் பெரும் ஊழல் மோசடியில் பணிப்பாளர் நாயகம் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர். இவ் விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு பல கடிதங்களை அனுப்பி வைத்தும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

நாட்டில் நேர்மையான ஆட்சி இடம்பெற வேண்டும் என்பதற்காக உழைத்து வருகின்ற ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, இதற்குரிய சட்ட நடவடிக்கையை எடுக்க வேண்டுமென பகிரங்கமாக கேட்டுக்கொள்கின்றோம். அத்தோடு ஜனாதிபதியை சந்திப்பதற்கும் முயற்சி எடுத்து வருகின்றோம்.- என்றார். (எ)



# மதிலை உடைத்துக்கொண்டு வளவுக்குள் நுழைந்த வாகனம்

மட்டக்களப்பு, நவ. 17

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, செட்டிப்பாளையத்தில் நள்ளிரவு வேளையில் மதிலை உடைத்துக்கொண்டு வளவொன்றினுள் வாகனம் ஒன்று புகுந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு - கல்முனை வீதி வழியே குருநாகலிருந்து மருதமுனை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த குறித்த வாகனம், செட்டிப்பாளையம் பிரதான வீதியால் பயணிக்கும் போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்தது. இந்த நிலையில், வீதியை விட்டு விலகி மதிலை உடைத்துக்கொண்டு வளவுக்குள் புகுந்துள்ளது.

இப்பிரதேசத்தில் மழையுடனான வானிலை நிலவி வரும் நிலையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

மருதமுனையில் உள்ள வெதுப்பகம் ஒன்றுக்கு சொந்தமான குறித்த வாகனத்தில் விபத்து சம்பவித்த சமயம் மருதமுனையைச் சேர்ந்த இருவர் பயணித்துள்ளதுடன் தெய்வாதீனமாக அவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. மதிலுக்கும் வீட்டின் சில உடைமைகளுக்கும் சேதமேற்பட்டுள்ளதுடன் வாகனத்தின் முன்பகுதியும் சேதமடைந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# அரசாங்கம் பக்கம் மாறுவதற்கு ஒருபோதும் தயாராக இல்லை

## இராதாகிருஷ்ணன் எம். பி. தெரிவிப்பு

நுவரெலியா, நவ. 17

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் நிலை வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியினர் அரசுக்கு ஆதரவாக வாக்களிக்க காரணம் தோட்டத் தொழிலாளர்களுக்கு நன்மை என்பதாலாகும். வாக்குறுதியளித்தபடி ஊதியம் அதிகரிக்கப்படாவிட்டால், அதையும் எதிர்ப்போம் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதேவேளை, வரவு- செலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்ததால் அரசாங்கத்தின் பக்கம் மாறுவதற்கு நாங்கள் தயாராக இல்லை என்றும் அவர் கூறினார்.

நுவரெலியாவில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

பொதுமக்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காக தமிழ் முற்போக்கு கூட்டணி என்ற வகையில் 2026 வரவு- செலவுத் திட்ட இரண்டாவது நிலை வாசிப்பில் ஆதரவாக வாக்களித்தோம்.

தற்போதைய அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி ஊதியத்தை அதிகரிக்கவில்லை என்றால் அரசாங்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம்.

கட்சி அல்லது எதிர்க்கட்சியைப் பொருட்படுத்தாமல் அரசாங்கம் கொண்டு வந்த நல்ல திட்டங்களை நாங்கள் ஆதரிக்கிறோம்.

ஏதாவது ஒரு காரணத்துக்காக அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்றால், தமிழ் முற்போக்கு கூட்டணி அரசாங்கத்துக்கு எதிராக செயல்படும் என்பதில் எந்த சந்தேகமும் இருக்கக்கூடாது.

வரவு- செலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்ததால் அரசாங்கத்தின் பக்கம் மாறுவதற்கு நாங்கள் தயாராக இல்லை. பொதுமக்கள் இந்தத் திட்டத்தை எதிர்த்தவர்களையே தொடர்ந்து விமர்சித்து வருகின்றனர்.

பொதுமக்களின் சார்பாக அரசாங்கம் முன்வைக்கும் எந்தவொரு நல்ல திட்டத்தையும் நாங்கள் ஒருபோதும் எதிர்க்கமாட்டோம். பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் இடத்தில் நாங்கள் எப்போதும் நிற்போம்.

பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்ததற்காக ஐக்கிய மக்கள் சக்தி, எம் மீது எந்த வெறுப்பும் கொள்ளவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியில் அரசியல் ரீதியாக முன்னேறுவோம் என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்கக்கூடாது - என்றார். (எ)

# மகள் துஷ்பிரயோகம் தந்தை கைதானார்

கல்முனை, நவ. 17

மகளை தொடர்ச்சியாக பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்த தந்தையை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் உள்ள புறநகர் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவியே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

14 வயது சிறுமியை அவரது தந்தை இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி வந்துள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரிய நீலாவணை பொலிஸாருக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் பாதிக்கப்பட்ட மாணவியை கல்முனையில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். (எ-01)

# 5 கிலோ கேரளக் கஞ்சாவுடன் நிந்தவூரில் சந்தேகநபர் கைது

நிந்தவூர், நவ. 17

அம்பாறை, நிந்தவூர் முதலாம் குறுக்கு வீதியில் கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபரிடமிருந்து 05 கிலோ 700 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர் அக்கரைப்பற்று பகுதியைச் சேர்ந்த 36 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மட்டக்களப்பில் கனமழை: வெள்ள அபாய எச்சரிக்கை

மட்டக்களப்பு, நவ. 17

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து கடுமையான மழை பெய்து வருகின்றது.

இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வெள்ள நிலைமை ஏற்படுவதற்கான நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடும் மழை காரணமாக மட்டக்களப்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ச்சியாக மழை பெய்யுமானால் சில பகுதிகளுக்கான போக்குவரத்துகளும் பாதிக்கப்படும் நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேநேரம், கடந்த 11 ஆம் திகதி உருவான காற்றுச் சுழற்சி நகர்வதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கன மழைக்கான வாய்ப்புள்ளதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 20 ஆம் திகதி வரை மழை தொடரும் வாய்ப்புள்ளது. கனமழைக்கு வாய்ப்புள்ளதனால் தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)



# வெளிநாட்டு பெண்ணுக்கு பாலியல் தொல்லை

பொத்துவில், நவ. 17

வெளிநாட்டு பெண் ஒருவரிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட முயன்றதாகச் சந்தேகிக்கப்படும் நபரைக் கைது செய்வதற்கு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி அம்பாறை, பொத்துவில் பகுதியில் உள்ள அறுகம் குடாவில் வெளிநாட்டு பெண் ஒருவருக்குப் பாலியல் தொந்தரவு கொடுத்த சம்பவம் தொடர்பில் குறித்த சந்தேகநபரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இது சம்பந்தமாக ஏதேனும் தகவல் தெரிந்தால், பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். பொத்துவில் பொலிஸ் நிலையம்: 063 2248022, பொத்துவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி: 071 8591168. (எ)

ரொட்டி கடையில் தகராறு:

# கத்திக்குத்துக்கு இலக்கான 7 பேர் மருத்துவமனையில்!

கண்டி, நவ. 17

கண்டி, உடுதும்பர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கலேகெலே பிரதேசத்தில் உள்ள ரொட்டி கடை ஒன்றில் இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் கத்திக்குத்துக்கு இலக்காகி 7 பேர் படுகாயமடைந்துள்ளதாக உடுதும்பர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்தவர்கள் கண்டி தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நான்கு பெண்களும் மூன்று ஆண்களுமே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பிரதேசவாசிகளின் உதவியுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 33 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை உடுதும்பர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணேஸ்வரம்...

திருகோணேஸ்வர ஆலயத்துக்கு செல்வதற்கு முன்னுள்ள பிரட்ரிக் கோட்டையின் அருகே கடற்கரையோரமாக நேற்று முன்தினம் இரவோடிரவாக பெயர்ப்பலகை நாட்டப்பட்டு, கட்டுமானப் பொருட்கள் இறக்கப்பட்டு ஆரம்பகட்ட வேலைகள் நடைபெற்றன. இந்த நிலையில், நேற்றைய தினம் விகாரைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளத் திணைக்களத்தின் அனுமதி பெறப்படாது இந்த விகாரை கட்டுமானப் பணி நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, அந்தத் திணைக்களத்தின் தலையீட்டால் கட்டுமான பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

திருகோணமலை மாநகர சபைக்கு உரித்தான கடற்கரை பகுதியில் ஏற்கனவே உள்ள அரச மரத்துடன் இணைந்த புத்தர் சிலை கட்டுமானத்தை அண்மித்து இந்த புதிய விகாரை அமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

அங்கு கட்டுமான பணி நடப்பதை அறிந்த கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூல வளத் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர். இதன்போது, அதிகாரிகள் அங்கு செல்லவிடாது தடுக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து அங்கு இழுபறிநிலை ஏற்பட்டது.

இதன்பின்னர், திணைக்கள அதிகாரிகள் திருகோணமலை துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். அதன் பின்னர் பொலிஸார் அங்கு சென்று கட்டுமான பணிகளை இடைநிறுத்தப் பணித்தனர்.

கட்டுமான வேலைகளை முன்னெடுத்தவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை நீதிமன்றம் மூலம் பொலிஸார் இன்றைய தினம் முன்னெடுப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்தக் கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சட்ட அனுமதியற்ற சிற்றூண்டிச் சாலையை கடந்த 5 ஆம் திகதி கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளத் திணைக்கள அதிகாரிகள் அகற்றச் சென்றபோது அங்குள்ள பௌத்த பிக்கு கால அவகாசம் கோரியிருந்தார். அவருக்கு வழங்கப்பட்ட 7 நாட்கள் கால அவகாசம் நேற்றைய தினத்துடன், நிறைவடைந்தது. இதன்படி, இன்றைய தினம் அனுமதி பெறப்படாத அந்த சிற்றூண்டிச்சாலை உடைத்து அகற்றப்படும் என்று கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## வட்டியில்லாத...

மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன்படி, 2022, 2023, 2024 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் இந்தக் கடன் திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தக் கடன் திட்டத்தின் கீழ், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட 18 பட்டமளிப்பு நிறுவனங்கள் வழங்கும் 131 பட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களை எதிரவரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## சகல அரச...

அமைச்சின் செயலாளர் ஊடாக அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் வெளியிடப்படும். இதன்படி, ஒவ்வொரு நிறுவனத் தலைவரும் தமது நிறுவனத்தை போதைப் பொருள் அற்ற நிறுவனமாக உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அல்லது பாவனையாளர்கள் நிறுவனங்களில் இருப்பது கண்டறியப்பட்டால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைக்கும் பொறுப்பு நிறுவன தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, கல்விச் செயலாளர் ஊடாகவும் இன்றைய தினம் சுற்றறிகை ஒன்று வெளியிடப்படும். இதன்படி, அனைத்து பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஏனைய கல்வி நிறுவனங்களிலும் போதைப்பொருள் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

தொலைதூர கிராமப் பாடசாலைகளில்கூட போதைப்பொருள் பாவனை குறித்த தகவல்கள் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், இந்த நடவடிக்கை அவசியமாகிறது. தற்போது பல இடங்களில் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போதைப்பொருள் தொடர்பான தகவல்களை பொதுமக்கள் வழங்க வசதியாக 1818 என்ற புதிய உதவி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், தேசிய போதைப்பொருள் சபைக்கான பணிமனை ஒன்று எதிர்வரும் 22ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

தற்போது ஜனாதிபதி செயலகம் ஊடாக தற்காலிகமாக 1818 என்ற உதவி இலக்கம் செயல்பட்டு வருவதுடன் முதல் 5 நாட்களில் மாத்திரம் சுமார் ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்தத் தகவல்களின் அடிப்படையில் தற்போது சுற்றிவளைப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## ஐ.எம்.எப்...

சோகை ஏற்படும் நிலையும் அதிகரித்து காணப்படுகின்றன. இதற்கு வறுமையே காரணம். இவற்றுக்கெல்லாம் அரசமைப்பு எதேச்சதிகாரத்தை கொண்டு வருவதே இந்த ஆளும் தரப்பினரிடம் காணப்படும் ஒரே தீர்வாக உள்ளது.

புதிய அரசியல் கலாசாரத்தை கொண்டு வருவோம் என மக்களுக்கு வாக்குறுதிகள் பல வழங்கி ஆட்சிக்கு வந்த இவர்கள், சிவில் பாதுகாப்பு குழுக்கள், இளைஞர் கழகங்கள்மீது அழுத்தம் கொடுத்து, மக்கள் விடுதலை முன்னணி கட்சியின் கட்டமைப்பை கீழ் மட்டத்தில் பலப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இவை அனைத்தையும் அவர்கள் பெலவத்தை கட்சி பணிமனையில் இருந்து மேற்கொண்டு வருவதை வெட்கமில்லாமல் ஏற்றும் கொள்கின்றனர். இவை சமூகத்தில் அமைந்து காணப்படும் ஜனநாயக அமைப்புகளாகும். ஜனநாயக அமைப்புகள் ஊடாக கட்சி அரசியலை பலப்படுத்தும் செயல்பாட்டை முன்னெடுத்துள்ளனர். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு இவர்கள் மாறு செய்கின்றனர். மக்கள் இந்தக் கலாசாரத்தை எதிர்பார்க்கவில்லை.

அரசாங்கம் தற்சமயம், ஐ. எம். எவ்.ஐ திருப்திப்படுத்தும் விதமாக செயல்பட்டு வருகிறது. ஐ. எம். எவ். விதித்த இலக்கையும் தாண்டி அரச வருவாயை ஈட்டிக் கொண்டாலும் அதனை மக்களுக்கு பயனளிக்கும் விதமாக நிவாரணங்கள் எதனையும் இதுவரையில் பெற்றுக் கொடுக்கவில்லை. வரிகளை அதிகரித்து, செலவினங்களை குறைத்துக் கொண்டமையால் இவ்வாறு ஏற்பட்டுள்ளது. அபிவிருத்திக்கும், நலன்புரி திட்டங்களுக்குமான நிதியை ஒதுக்காது, வரிகளை அதிகரித்து, திறைசேரியை நிரப்புவதால் பயனில்லை. செலவுகளை குறைத்து, வரி வருவாயை அதிகரித்து அதன் மூலம் பல கோடி ரூபாய் நிதியை சேமிப்பது வீரதீர செயல் அல்ல - என்றார்.

நேற்றைய தினம் மாத்தறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்ட விடயங்களைத் தெரிவித்தார். (ஐ)

## ஜே.வி.பி

அரசியல் தரப்பினரை சந்திப்பார் என்று தெரிய வருகிறது.

ஜே. வி. பி. ஆரம்பகாலம் முதல் தீவிர இந்திய எதிர்ப்பு கொள்கையை கடைப்பிடித்தது. அத்துடன், 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ரில்வின் சில்வா கடுமையாக எதிர்த்திருந்தார். ரில்வின் சில்வாவின் இந்திய பயணம் இராஜதந்திர ரீதியில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

முன்னதாக, ரில்வின் சில்வா சீனாவுக்கு பயணம் செய்திருந்தார். அத்துடன், அந்த நாட்டுடன் அம்பாந்தோட்டை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் உள்ளிட்ட பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெருந்தோட்ட...

மஸ்கெலியாவை சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் நேற்றைய தினம் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் தோட்டத் தொழிலாளரின் நாளாந்த சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்தது. இதன்படி, அரசாங்கத்தால் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள ரூ. 200 கொடுப்பனவு சட்டவிரோதமானது என்று குறிப்பிட்டு, இந்தக் கொடுப்பனவை வழங்குவதைத் தடுக்க எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர் என்று கூறியே இந்த எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பொகவந்தலாவ நகரில், தோட்டத் தொழிலாளர்கள் ஒரு சவப்பெட்டியை ஏந்தி ஊர்வலமாகச் சுற்றி வந்து எதிர்க்கட்சியினர் சிலரின் புகைப் படங்களையும், உருவப் பொம்மைகளையும் எரித்து, எதிர்ப்பு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பி கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். (ஐ)

## அரச...

மருந்தகங்களில் இருந்து வாங்க வேண்டிய மருந்துகளை பரிந்துரைப்பது, வெளிப்புற ஆய்வகங்களில் இருந்து செய்ய வேண்டிய சோதனைகளை பரிந்துரைப்பது உள்ளிட்ட தெரிந்தெடுக்கப்பட்ட சேவைகளை வழங்குவதை மருத்துவர்கள் மட்டுப்படுத்துவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

2026ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் சுகாதார சேவைகள், மருத்துவர்களின் பிரச்னைகளை முறையாகத் தீர்ப்பதற்கு தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இது தொடர்பாக அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டபோதிலும் சாதகமான பதில் கிடைக்காதமையால் தமது சங்கம் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையை எடுக்கத் தீர்மானித்ததாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## சீரற்ற...

அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து பெய்துவரும் கனமழை மற்றும் கடும் காற்றால் வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புங்குடுதீவில் 3 குடும்பங்களை சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வடக்கு...

நேரத்தில் மட்டக்களப்பில் 250 மில்லிமீற்றருக்கு மேற்பட்ட மழைவீழ்ச்சியும் 36 மணி நேரத்தில் யாழ்ப்பாணத்தில் 125 மி. மீற்றருக்கு மேற்பட்ட மழைவீழ்ச்சியும் பதிவாகின.

இன்னமும் இரு நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என்பதால் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு நகர பிரதேசங்களை அண்மித்த - தாழ்நில பகுதிகளை சேர்ந்த மக்கள் வெள்ளம் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியமாகும்.

எதிர்வரும் 23ஆம் திகதியிலிருந்து 28ஆம் தேதி வரையும் வங்காள விரிகுடாவில் புயல் ஒன்று உருவாகுவதற்கான வாய்ப்பு காணப்படுவதால் அந்தக்கால பகுதியிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மிகக் கன மழையைப் பெறும்.

இம்முறை மழையின் போக்கில் மிகப்பெரியளவிலான இடம் சார்ந்த வேறுபாட்டை உணர முடிகின்றது குறிப்பாக அதிகளவிலான மழையை பெறுகின்ற வவுனியா மற்றும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னர் மாவட்டங்கள் ஒப்பீட்டளவில் குறைந்த மழையைப் பெற்றிருக்கின்றன.

காலநிலை மாற்றத்தின் மிக முக்கியமான பிரச்னைகளில் ஒன்றாக கருதப்படுகின்ற நுண் காலநிலை வேறுபாடுகளை நாம் உணரத் தொடங்கி இருக்கிறோம்.

வடகீழ்ப் பருவக்காற்று இன்னமும் உச்சம் பெறவில்லை. பருவ மழைக்கான காலம் இன்னமும் போதுமானதாக உள்ளது. எதிர்பார்க்கும் மழை கிடைக்குமென எதிர்பார்க்கலாம் - என்றுள்ளது. (ஐ)

## இலங்கை...

தீவாக தனித்து இருப்பதே எல்லாவற்றுக்கும் நன்மையாக அமையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவுடனான தரைவழிப் பாதையில் உடன்பாடில்லை. எனினும், இராமர் பாலத்தை சென்று மக்கள் பார்வையிடுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வானொலி ஒன்றுக்கு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அளித்த நேர்காணலிலேயே மேற்படி விடயங்களைக் கூறியுள்ளார். (ஐ)

## வெளிநாட்டு...

தேடப்பட்டு வந்தார்.

இந்த நிலையில், அவரை

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த இளைஞர் தனக்கு பாலியல் தொந்தரவு அளித்த செயலை வெளிநாட்டு யுவதி காணொலியாக பதிவு செய்து அதனை சமூகவலைதளத்தில் பகிர்ந்ததுடன், இது தொடர்பில் பொலிஸ் முறைப்பாடும் அளித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ரணிலுக்கு எதிரான வழக்கு: ஐவர் குழு பிரிட்டன் சென்றது

கொழும்பு, நவ. 17

**ரணில் விக்கிரமசிங்க பொது நிதியை தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுக்கு எதிரான வழக்கு தொடர்பில் ஆதாரங்கள், வாக்குமூலங்களை திரட்டுவதற்கு சி. ஐ. டியின் ஐவர் குழு இங்கிலாந்து சென்றுள்ளது.**

இந்தக் குழு, பிரிட்டன் வோல்வர் ஹாம்டன் பல்கலைக்கழகத்தால் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் அழைப்பு கடிதத்தின் நம்பகத்தன்மையை ஆராயவுள்ளது என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன், இங்கிலாந்தில் உள்ள முன்னாள் இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேனவிடம் இந்தக் குழு இன்றைய தினம் வாக்குமூலத்தையும் பதிவு செய்யவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2023, செப்ரெம்பரில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க வோல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள இங்கிலாந்துக்கு சென்ற போது, சரோஜா சிறிசேனவே இங்கிலாந்துக்கான உயர்ஸ்தானிகராக செயல்பட்டார்.

இதன்படி, இங்கிலாந்தில் தற்போது வசிக்கும் சிறிசேன லண்டனில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தில் வாக்குமூலம் அளிக்க முன்னிலையாகுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் இரண்டு நாள் பயணத்தின்போது ஒரு கோடியே 66 இலட்சம் ரூபாய் பொது நிதியை செலவிட்டமை தனிப்பட்ட பயணத்துக்கானது என்று குற்றப்புலனாய்வு துறையினர் கூறுகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க கடந்த ஓகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாத்திரிகர்களுடன் பயணித்த பேருந்து தீப்பிடித்து நாசமானது

கொழும்பு, நவ. 17

கம்பளையில் இருந்து அநுராதபுரம் சென்ற யாத்திரிகர் குழுவை ஏற்றிச்சென்ற சொகுசு பேருந்து தீப்பிடித்து எரிந்து நாசமானது.

ஏ-9 வீதியில் அநுராதபுரம் - கல்குளம் பகுதியிலேயே பேருந்து தீப்பிடித்து எரிந்துள்ளது. பேருந்தில் ஏற்பட்ட திடீர் தொழில்நுட்ப கோளாறாலேயே இந்தத் தீ விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

பொலிஸாரும் அநுராதபுரம் நகராட்சி தீயணைப்புத் துறை அதிகாரிகளும் இணைந்து தீயை விரைவாக அணைத்தனர். ஆனால், தீ விபத்தில் பேருந்து முற்றிலுமாக எரிந்து நாசமானது.

இதன்போது, 11 யாத்திரிகர்கள் பேருந்தில் பயணித்திருந்தனர் என்றும் எனினும் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## சுற்றுலா மூலமாக 10 மாதங்களில் 265.9 கோடி டொலர்கள் வருமானம்

கொழும்பு, நவ. 17

நடப்பு ஆண்டின் முதல் 10 மாதங்களில் சுற்றுலா மூலமாக வருவாய் 265 கோடியே 90 இலட்சம் அமெரிக்க டொலர்கள் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் மாதத்தில் மட்டும் பதிவான சுற்றுலா வருவாய் 18 கோடியே 61 இலட்சம் டொலர்களாகும். இது 2024 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் பதிவான சுற்றுலா வருவாயான 253 ககோடியே 37 இலட்சம் டொலர்களுடன் ஒப்பிடுகையில் 4.9 வீதம் அதிகரிப்பாகும் என்று மத்திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் சமீபத்திய புள்ளி விவரங்களின்படி, 2025 ஜனவரி மாதம் முதல் நவம்பர் 12 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 19 இலட்சத்து 72 ஆயிரத்து 957 ஆகும்.

இவர்களில் 4 இலட்சத்து 43 ஆயிரத்து 622 சுற்றுலா பயணிகள் இந்தியாவிலிருந்தும் ஒரு இலட்சத்து 80 ஆயிரத்து 592 பேர் ஐக்கிய இராச்சியத்திலிருந்தும், ஒரு இலட்சத்து 44 ஆயிரத்து 308 பேர் ரஷ்யாவிலிருந்தும் ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 53 பேர் ஜெர்மனியிலிருந்தும் ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 400 பேர் சீனாவிலிருந்தும் வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

## வாகன இலக்கத் தகடுகள் இரு மாதங்களில் கிடைக்கும்

கொழும்பு, நவ. 17

புதிய வாகன இலக்கத் தகடுகளை அடுத்த இரு மாதங்களுக்குள் வழங்க முடியும் என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய வாகன இலக்கத்தகடுகளை முன்னர் அறிவிக்கப்பட்ட காலத்துக்குள் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டிருந்தது. தொழில்நுட்ப சோதனை நடவடிக்கையில் ஏற்பட்ட தாமதங்களால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

முன்னதாக இந்த மாதம் புதிய வாகன இலக்கத்தகடுகள் வழங்கப்படும் என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட நிலையில், வழங்கப்பட்ட திகதிக்குள் அதனை பூர்த்தி செய்யமுடியவில்லை என்று கூறப்படுகிறது. எனினும், எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் புதிய வாகன இலக்கத் தகடுகளை வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வாகன இலக்கத் தகடுகளின்றி ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் உள்ளன என்று போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## வெளியுறவில் இனி பழைய பிம்பத்தை காணமுடியாது!

பிரதமர் ஹரிணி அமரசூரிய



கொழும்பு, நவ. 17

வெளியுறவு விவகாரங்களில் இனி முன்பிருந்த பழைய பிம்பத்தை காணமாட்டோம். மாறாக, அது இப்போது ஒரு முற்போக்கான - நியாயமான - நிலையான மற்றும் பொருளாதார ரீதியாக பங்களிக்கும் துறையாக உருவாகி வருகிறது - என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நிறுவப்பட்டதன் 40ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 40 ஆண்டுகால வரலாற்றில், இந்தத் துறையில் நாம் இப்போது நவீன மற்றும் சிறந்த காலகட்டத்தை அடைந்துள்ளோம். வெளியுறவு பற்றிக் குறிப்பிடும்போது இனி முன்பிருந்த பழைய பிம்பத்தை காணமாட்டோம். மாறாக, அது இப்போது ஒரு முற்போக்கான - நியாயமான - நிலையான மற்றும் பொருளாதார ரீதியாக பங்களிக்கும் துறையாக உருவாகி வருகிறது.

பயிற்றப்பட்ட வெளிநாட்டு தொழிலாளர்களை உருவாக்குவது எமது பொறுப்பு. எமது மனித வளத்தை மதிப்பும் கேள்வியுமுள்ள மனித வளமாக மாற்றும் பொறுப்பும் எமக்கு உள்ளது. அத்துடன், வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை புலம்பெயர் சமூகத்தின் நலன், பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதில் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளோம். வெளிநாடுகளில் வேலைவாய்ப்புகள் மற்றும் சேவைகளைப் பெறுவதற்கு தூதரகங்களிடமிருந்து மேலும் ஆதரவை எதிர்பார்க்கிறோம் - என்றும் கூறினார். (ஐ)

## சிறீதரனுக்கு எதிரான முறைப்பாடு விசாரணைகள் ஆரம்பமாகின

கொழும்பு, நவ. 17

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு எதிராகக் கையூட்டல், ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு எதிராக முறைப்பாட்டை முன்வைத்த சிவில் அமைப்பின் சஞ்சீவ மஹவத்தவிடம், நேற்று முன்தினம் 6 மணித்தியாலங்களாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. கையூட்டல், ஊழல் விசாரணை ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

வருமானத்துக்கு அதிகமாக சொத்துகளை சேர்த்துள்ளார் என்று கூறியே பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு எதிராகக் கையூட்டல், ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை தமக்கு எதிராக குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் விசாரணைகளை எதிர்கொள்ளத் தயார் என்றும் தெரிவித்துள்ளார்.

## புதையல் தோண்டியோர் கைது

கொழும்பு, நவ. 17

புதையல் தோண்டினர் என்ற குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

குருநாகல் - போயவலான பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து அகழ்வாராய்ச்சி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் 38 மற்றும் 57 வயதுடையவர்களாவர். போயவலான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறனர். (ஐ)

## போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய இடங்கள் சிக்கின

கொழும்பு, நவ. 17

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தங்கள் போதைப்பொருள் பொட்டலங்களை அடையாளம் காணப் பயன்படுத்தும் குறியீட்டு ஸ்ரிக்கர்களை உருவாக்கும் இடம் ஒன்றை பொலிஸ் மத்திய குற்ற புலனாய்வு பணியகம் சுற்றிவளைத்தது.

இதன்போது ஒருவர் கைது செய்யப்பட்டார். அத்துடன், ஒரு தொகுதி குறியீட்டு ஸ்ரிக்கர்களும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு - கல்கிசையில் உள்ள இடம் ஒன்றே இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டது. இந்த இடத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேபோன்று, ஹெரோயின் போதைப்பொருள் பொதியிடலுக்கு பயன்படுத்தப்படும் ஸ்ரிக்கர்களை அச்சிட்ட மொரட்டுமுல்லை, கட்டுபெத்தையில் அமைந்துள்ள இடமொன்றும் பொலிஸரால் சுற்றிவளைக்கப்பட்டது.

கடந்த 9 ஆம் திகதி ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலேயே இந்த இடங்கள் குறித்த விடயம் பொலிஸாருக்கு தெரிய வந்தது. (ஐ)

## தென் மாகாண ஆளுநர் பந்துல காலமானார்!

கொழும்பு, நவ. 17

தென் மாகாண ஆளுநர் பந்துல ஹரிச்சந்திர (வயது 62) நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

நோய்க்காக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று காலை அவர் காலமானார்.

இவர் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி, அமைச்சு செயலாளர், மாவட்டச் செயலாளர் மற்றும் பல அரச நிறுவனங்களின் தலைவர் எனப் பல பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org